Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, ஜூலை 26, 2024 | இதழ் 104

# கார்கில் போர் வெற்றியின் 25-வது நினைவு தினம் பயங்கரவாதத்தை தூண்டும் பாகிஸ்தான்: பிரதமர் மோடி கடும் எச்சரிக்கை யுத்த நினைவிடத்தில் வீரவணக்கம்



சென்னை, 26 ஜூலை 2024: கடந்த கால தவறுகளில் இருந்து பாகிஸ்தான் இன்னும் பாடம் கற்கவில்லை. பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தூண்டி விடுகிறது. அதனை இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம்" என பிரதமர் மோடி காட்டமாக எச்சரித்தார்.

கார்கில் போர் வெற்றியின் 25-வது நினைவு தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் அப்போரில் இன்னுயிர் நீத்த ராணுவத்தினருக்கு கார்கில் மாவட்டம் டிராஸ் பகுதியில் உள்ள நினைவிடத்தில் மோடி வீரவணக்கம் செலுத்தினார்.

இதன்பின் போர் நினைவிடத்தில் பிரதமர் மோடி பேசுகையில் கூறியதாவது:

“இன்று, லடாக்கின் இந்த மாபெரும் நிலம், கார்கில் வெற்றியின் 25வது ஆண்டு விழாவைக் காண்கிறது. நாட்டிற்காக உயிர் தியாகம் செய்ததற்காக ராணுவ வீரர்களுக்கு தேசம் எப்போதும் கடமைப்பட்டு உள்ளது. 1999 ல் கார்கிலில் ராணுவ வீரர்களை சந்தித்த அனுபவம் உள்ளது. கார்கில் போரில் உயிர் தியாகம் செய்தவர்களுக்கு தலைவணங்குகிறேன்.

கார்கில் போரின் வெற்றி எந்த ஒரு அரசுக்கோ அல்லது கட்சிக்கோ கிடைத்த வெற்றி அல்ல. ஒட்டுமொத்த நாட்டுக்கே சொந்தமான வெற்றியாகும்.

தேசத்துக்காகச் செய்த தியாகங்கள் அழியாதவை என்பதை கார்கில் வெற்றி நமக்குச் சொல்கிறது. கடந்த கால தவறுகளில் இருந்து பாகிஸ்தான் இன்னும் பாடம் கற்கவில்லை.

கடந்த காலங்களில் பாகிஸ்தான் தனது அனைத்து மோசமான முயற்சிகளிலும் தோல்வியே கண்டது. ஆனாலும், அவற்றில் இருந்து எதையும் பாகிஸ்தான் கற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்து தீவிரவாதம் போன்ற செயல்களில் ஈடுபடுகிறது. தீவிரவாதிகள் என் குரலை நேரடியாகக் கேட்கும் இடத்திலிருந்து இன்று நான் பேசுகிறேன்.

தீவிரவாதத்தின் ஆதரவாளர்களே... உங்களின் மோசமான நோக்கங்கள் எதுவும் வெற்றியடையாது. தீயநோக்கத்துடன் இந்தியாவை அணுகினால், இந்திய ராணுவ வீரர்கள் தங்களின் முழு பலத்துடன் தீவிரவாதத்தை நசுக்குவார்கள். எதிரிகளுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும்.

370 நீக்கிய பிறகு காஷ்மீர் வளர்ச்சியை கண்டுள்ளது. காஷ்மீரில் உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை வளர்ந்து வருகிறது. புது எதிர்காலத்தை பற்றி காஷ்மீர் சிந்தித்து வருகிறது. பல தசாப்தங்களுக்கு பிறகு சினிமா ஹால் திறக்கப்பட்டது. லடாக்கில் இயல்பு வாழ்க்கை திரும்ப அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு உள்ளது.

இளைஞர்களை எதிர்க்கட்சிகள் தவறாக வழிநடத்துகிறது. பென்சன் தொகையை சேமிப்பதற்காக அக்னிவீர் திட்டம் செயல்படுத்தவில்லை. பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் அக்னிவீரர்கள் விவகாரத்தை எதிர்க்கட்சிகள் அரசியலாக்குகின்றன.

ஒரே ரேங்க் ஒரே பென்ஷன் என்னும் பெயரில் கடந்த கால அரசுகள் பொய்யான வாக்குறுதிகளை அளித்துள்ளன. இப்போதைய பா.ஜ.க. அரசு மட்டுமே 1.25 லட்சம் கோடியை முன்னாள் ராணுவத்தினருக்கு பென்ஷனாக வழங்கி உள்ளது.

அக்னிபாத் திட்டத்தின் குறிக்கோள், இந்திய ராணுவத்தை இளமையாக வைத்திருப்பதுதான். ராணுவத்தை தொடர்ந்து போருக்குத் தகுதியாக வைத்திருப்பதே அக்னிபாத் திட்டத்தின் நோக்கம். துரதிர்ஷ்டவசமாக, சிலர் தேசிய பாதுகாப்பு தொடர்பான இத்தகைய உணர்ச்சிகரமான பிரச்சினையோடு அரசியலைக் கலக்குகின்றனர். சிலர் தங்களின் சொந்த அரசியல் நலனுக்காக ராணுவத்தின் சீர்திருத்தத்திலும் அரசியல் செய்கின்றனர். பல ஆயிரம் கோடி மோசடி செய்து நமது ராணுவத்தை பலவீனப்படுத்தியது இவர்கள்தான்.

விமானப்படைக்கு நவீன போர் விமானங்கள் கிடைக்கக் கூடாது என்று விரும்பியதும் இதே நபர்கள்தான். ராணுவம் என்றால் அரசியல்வாதிகளுக்கு வணக்கம் செலுத்துவது, அணிவகுப்பு நடத்துவது என்று சிலர் நினைக்கிறார்கள், ஆனால் எங்களைப் பொறுத்தவரை ராணுவம் என்றால் 140 கோடி நாட்டு மக்களின் நம்பிக்கை.”

கடந்த 5 ஆண்டுகளில் லடாக்கிற்கான பட்ஜெட் ஒதுக்கீடு ரூ.1100 கோடியிலிருந்து 6000 கோடியாக உயர்ந்திருக்கிறது.

கார்கில் போரில் நாம் போரில் மட்டும் வெற்றி பெறவில்லை. இந்தியாவின் உண்மை, வல்லமை, கட்டுப்பாட்டையும் வெளிக்காட்டி இருக்கிறோம். அமைதியை நிலைநாட்டவே இந்தியா விரும்பி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பொய்யும் புரட்டும் பதட்டமும் பயங்கரவாதமும் ஒடுக்கப்பட்டு வருகிறது.

நம்மிடம் இருக்கும் துணிவு பாகிஸ்தானின் எந்த ஒரு பயங்கரவாத நடவடிக்கையையும் தவிடு பொடியாக்கும். ஜம்மு காஷ்மீராகட்டும், லே பிராந்தியமாகட்டும் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட எதிர்ப்படும் சவால்களையும் இந்தியா முறியடித்து வெற்றி காணும்.

இன்னும் ஒரு சில நாட்கள் போனால் ஆகஸ்ட் 15ந் தேதி வந்தால்... 370வது ஷரத்தை நீக்கி 5 ஆண்டுகள் பூர்த்தி அடையும். இந்நிலையில் ஜம்மு காஷ்மீர் கனவுகள் கற்பனைகளோடு எதிர்கால வளரமான திட்டங்களை காஷ்மீர் பேசிக்கொண்டு வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

கார்கில் சென்ற பிரதமர் மோடி, ஷிங்குன் லா சுரங்கப்பாதை திட்டத்தை பிரதமர் மோடி துவங்கி வைத்தார். 4.1 கி.மீ. நீளமுள்ள இரட்டைக் குழாய் சுரங்கப்பாதையாக ஷிங்குன் லா சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது. இந்த சுரங்கப்பாதை கட்டி முடிக்கப்பட்ட பின், இதுதான் உலகின் மிக உயரமான சுரங்கப்பாதையாக இருக்கும்.

# கோவா - கர்நாடகா எல்லையில் நிலச்சரிவு: அந்தரத்தில் தொங்கிய ரெயில் பாலம்



சென்னை, 26 ஜூலை 2024: கோவா - கர்நாடகா எல்லைப் பகுதியில் நேற்று இரவு துத்சாகர் மற்றும் சோனாலிம் பகுதிகளுக்கு இடையில் நிலச்சரிவு ஏற்பட்டதில் ரெயில் பாலம் அந்தரத்தில் தொங்கியது. இதனால் 5 ரெயில் சேவைகள் பாதிக்கப்பட்டதாக தென்மேற்கு ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்

லோண்டா மற்றும் டினைகாட் (கர்நாடகா எல்லைக்கு அருகில்) இடைப்பட்ட பகுதியில் மரங்கள் சரிந்து மின்சார இணைப்பு பாதிக்கப்பட்டதால் ரெயில் பாதைகளில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இதுகுறித்து தென்மேற்கு ரெயில்வேயின் தலைமை மக்கள் தொடர்பு அதிகாரி டாக்டர் மஞ்சுநாத் கனமதி கூறுகையில், “இந்த சம்பவம் இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை பதிவாகியுள்ளன. விழுந்த மரங்களை அகற்றிய பின்னர் காலை 6 மணிக்கு மீண்டும் ரெயில் போக்குவரத்து தொடங்கியது. இரவு 1 மணிக்கு சோனலிம் நிலையத்துக்கு வந்த வாஸ்கோடகாமா - யஸ்வந்த்பூர் விரைவு ரெயில், குலேம் நிலையத்துக்கு (கோவா) திருப்பிவிடப்பட்டது. இதனிடையே வாஸ்கோடகாமா வாராந்திர விரைவு ரயில், அதிகாலை 1.40 முதல் லோண்டாவில் நிறுத்தி வைக்கப்பட்டது.

வாஸ்கோடகாமா விரைவு ரெயில் அல்நாவர் (கர்நாடகா) நிலையத்தில் காலை 1.55 மணிக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

அதேநேரத்தில் கோவா விரைவு வண்டி பெலாகவியில் இருந்து அதிகாலை 1.35 மணிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. வாஸ்கோ ஜசிதிக் விரைவு ரெயில் வாஸ்கோவில் இருந்து காலை 7.30 மணிக்கு புறப்படும்படி நேரம் மாற்றியமைக்கப்பட்டது. ரெயில் பாதைகள் சீரமைக்கப்பட்டதுடன் லோண்டாவில் இருந்து காலை 6 மணிக்கும், அல்நாவரில் இருந்து 6.05 மணிக்கும் ரெயில்கள் புறப்பட்டுச் சென்றது.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkural@gmail.com
உள்ளது உள்ளபடி
வெள்ளிக்கிழமை, ஜூலை 26, 2024

# டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் ரூ.257 கோடியில் கட்டிடங்கள்: முதல்வர் ஸ்டாலின் அடிக்கல்



சென்னை, 26 ஜூலை 2024: முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக, புதுடெல்லி, சாணக்யபுரியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தில் 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டடப்படவுள்ள கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

18.6.2021 அன்று முதலமைச்சர் தலைமையில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில், புதுடெல்லி மிக தீவிர நில அதிர்வு மண்டலம் மிக்ஷி ஆக மறுவகைப்படுத்தப்படுத்துள்ளதை கருத்தில் கொண்டு வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தினை பழைய கட்டடங்களை முழுவதுமாக இடித்து மறுமேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள விரிவான ஆலோசனை நடத்தினார். அதன்படி, விரிவான வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு, சம்மந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து உரிய ஒப்புதல்கள் பெறப்பட்டன.

புதியதாக கட்டப்படவுள்ள இக்கட்டடம் மிக தீவிர நில அதிர்வை எதிர்கொள்ளும் கட்டமைப்பாக வடிவமைக்கப்பட்டு, இந்திய தொழில்நுட்பக்கழகம், சென்னை மூலம் ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசின் பொதுத் துறையால் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தை மறுசீரமைத்து புதிய கட்டடங்களை கட்டுவதற்கு 257 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சாணயக்யபுரியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்லத்திற்கான மறுமேம்பாட்டு திட்டத்தில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களின் விவரங்கள்

இப்புதிய கட்டடம் மிக முக்கிய பிரமுகர் தொகுதி, விருந்தினர் மாளிகை தொகுதி மற்றும் அலுவலர்கள் குடியிருப்புத் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்கியது. இக்கட்டடம், 3 அடித்தளங்கள், தரைத்தளம் மற்றும் 7 மேல் தளங்களைக் கொண்டதாகவும், மொத்தம் 3 லட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டடப்படவுள்ளது.

மேலும், மிக முக்கிய பிரமுகர் அறை, 39 முக்கிய பிரமுகர்கள் அறைகள், 60 உயர்தர அறைகள், 72 படுக்கை வசதிகள் கொண்ட தங்கும் கூடம், பல்நோக்கு அரங்கம், 3 உணவருந்தும் அறைகள், காத்திருப்பு அறைகள், கண்காட்சி அறை, மிக முக்கிய பிரமுகர்களின் முகாம் அலுவலகம், சந்திப்பு அறைகள், உடற்பயிற்சி மையம், வணிக மையம், நு□லகம் மற்றும் பல்வேறு வசதிகளுடன் இப்புதிய கட்டடம் கட்டடப்படவுள்ளது.

தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுத் துறை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், பொதுத் துறை அரசு துணைச் செயலாளர் ஜெ.இ. பத்மஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக புதுடெல்லியிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராசா, திருச்சி சிவா, தொல் திருமாவளவன், மாணிக்கம் தாகூர், ஜோதிமணி, சு.வெங்கடேசன், துரை வைகோ, வை. செல்வராஜ் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் சாட்டர்ஜி, கூடுதல் உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பிசினஸ் வளர்ச்சியை விரைவுபடுத்த நிதிதிரட்டல் நடவடிக்கைக்கு ஒப்புதல் அளித்திருக்கும் பாட்டியா கம்யூனிகேஷன்ஸ் & ரீடெய்ல் (இந்தியா) லிமிடெட் - ன் இயக்குனர்கள் குழு

BHATIA'S®
The mobile one stop shop

சென்னை, 26 ஜூலை 2024: மொபைல் கைபேசிகள், டேப்லெட்டுகள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் பிற மின்னணு உபகரணங்களின் சில்லறை மற்றும் மொத்த விநியோக வணிகத்தில் ஈடுபட்டுள்ள முன்னணி நிறுவனமான பாட்டியா கம்யூனிகேஷன்ஸ் & ரீடெய்ல் (இந்தியா) லிமிடெட் - ன் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் நிதி திரட்டலுக்கான முன்வரைவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதை அறிவித்திருக்கிறது. நிறுவனத்தின் வணிக செயல்பாடுகளை விரிவுபடுத்தும் திட்டத்திற்கும் மற்றும் நீண்டகால நிதிசார் ஆதாரங்களை வலுவாக்கவும் தேவைப்படும் நிதியை திரட்டுவதே இந்த முன்வரைவு திட்டத்தின் நோக்கமாகும். பங்குதாரரர்கள் மற்றும் பொருந்தக்கூடிய பிற ஒழுங்குமுறை அதிகார அமைப்புகளின் ஒப்புதல் மற்றும் அனுமதிக்கு உட்பட்டு, புரமோட்டர் குழுவினருக்கும் மற்றும் பொது வகையினத்தைச் சேர்ந்த நபர்களுக்கும் மாற்றக்கூடிய வாரண்ட்டுகள் வெளியீடு வழியாக, ரூ. 36.21 கோடி என்ற தொகையை முதலீடாக திரட்ட இந்நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. ஃபோர்ப்ஸ் இஎம்எஃப் மற்றும் எபிசு குளோபல் ஆப்பர்ச்சுனிட்டிஸ் ஃபண்டு லிமிடெட் ஆகிய பொது எஃப் பி ஐ நிறுவனங்களுக்கும் மற்றும் புரமோட்டர் மற்றும் பொது குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் இந்த வாரண்ட்களை ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இதற்கு முன்னதாக, மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த ஆண்டில் வலுவான வருவாயை ஈட்டியிருக்கும் நிதிநிலை முடிவுகளை இந்நிறுவனம் வெளியிட்டிருந்தது.

நிதியாண்டு எஃப் ஒய்24 இல், ரூ. 415 கோடி என்ற வருவாயை இந்நிறுவனம் ஈட்டியிருந்தது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 20% வளர்ச்சியாகும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஈ பி ஐ டி டி ஏ ஆண்டுக்கு 25% வளர்ச்சியுடன், ரூ. 18.45 கோடியாக பதிவாகியிருந்தது. நிறுவனத்தின் நிகர லாபமும் (பி ஏ டி), முந்தைய ஆண்டை விட 36% வளர்ச்சியுடன் ரூ. 11.53 கோடியாக உயர்ந்திருக்கிறது. மொபைல் கைபேசிகள், டேப்லெட்டுகள், டேட்டா கார்டுகள், மொபைல் பாகங்கள், ஏர் கண்டிஷனர்கள், வாஷிங் மெஷின்கள் மற்றும் பிற மின்னணு உபகரணங்களின் சில்லறை மற்றும் மொத்த விநியோக வணிகத்தில் பாட்டியா கம்யூனிகேஷன்ஸ் & ரீடெய்ல் (இந்தியா) லிமிடெட் ஈடுபட்டு வருகிறது. ஆப்பிள் ஐபோன், சாம்சங், ஒப்போ, விவோ, ஹானர், ஜியோ, ரியல்மீ, ரெட்மீ, நோக்கியா மற்றும் பல முக்கிய பிராண்டுகளின் ஸ்மார்ட் மொபைல் கைபேசிகளை இந்நிறுவனம் விற்பனை செய்கிறது. டேப்லெட்டுகள், டேட்டா கார்டுகள் மற்றும் துணைப் பொருட்களுடன் இத்தயாரிப்புகள் அனைத்தும், சூரத், வாபி, வல்சாத், நவ்சாரி, வியாரா மற்றும் தெற்கு குஜராத்தில் உள்ள பிற நகரங்கள் உட்பட தெற்கு குஜராத் பிராந்தியத்தில் அமைந்துள்ள அதன் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் ஒரே அமைவிடத்தின் கீழ் கிடைக்கும். கூடுதலாக, அதே சேவைகளை தெற்கு குஜராத் பிராந்தியத்திலுள்ள தனது பிரான்சைஸ் ரீடெய்ல் சங்கிலித்தொடர் டீலர்கள் வழியாக இந்நிறுவனம் வழங்கி வருகிறது.

# கடந்த 2 ஆண்டில் அறிவித்திருக்கும் 135 திட்டப்பணிகளும் அடுத்த ஆண்டிற்குள் முடிவடையும்: பி.கே.சேகர்பாபு தகவல் மின்னல் வேகத்தில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்



சென்னை, 26 ஜூலை 2024: சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 2023 -24, 2024 -25 ஆகிய 2 ஆண்டுகளில் அறிவித்த 100 அறிவிப்புகளில் உள்ள 135 பணிகளும் வருகின்ற 2025 டிசம்பர் மாதத்துக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான அனைத்து முயற்சிகளையும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தொடர்ந்து முழுவீச்சில் செயல்பட்டு கொண்டிருக்கின்றது என்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி இன்று சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, அகரம், ஜெகந்நாதன் தெருவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மறுவாழ்வு மற்றும் ரத்த சுத்திகரிப்பு மையத்தினையும், அகரம், ஜெகந்நாதன் தெருவில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சென்னை மாநகராட்சியின் பன்னோக்கு மையத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் புதிதாக அமையவுள்ள பகிர்ந்த பணியிட மையத்தினையும்,

கொளத்தூர், ரெட்ஹில்ஸ் ரோட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் நவீன சந்தையையும் மற்றும் கொளத்தூர், ரெட்ஹில்ஸ் ரோட்டில் அமையவுள்ள புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம் மற்றும் சி.எம்.டி.ஏ., சார்பில் பகிர்ந்த பணியிட மையம் என ஒருங்கிணைந்த மக்கள் சேவை மையத்திற்கான இடத்தினையும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

இன்றைக்கு கொளத்தூர் பகுதி மக்கள் வருவாய் சம்பந்தப்பட்ட இனங்களுக்கு அணுக வேண்டும் என்றால், முதியோர் ஒய்வூதிய தொகை, அதேபோல் பொங்கலுக்கு தருகின்ற சிறப்பு பரிசுகள் சான்றிதழ்கள், வருமானச் சான்றிதழ் போன்றவர்களை பெறுவதற்கு அதிக தூரம் பயணிக்கின்ற நிலை இருந்ததால் தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று கொளத்தூர் என்று தனியாக ஒரு வட்டாட்சியர் அலுவலகம் உருவாவதற்கு தமிழக முதல்வர் அரசாணை பிறப்பித்திருக்கிறார்.

அகரம், ஜெகந்நாதன் தெருவில் அமைய பெற்றிருக்கின்ற சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியோடு சென்னை பெருநகரத்தின் மூலநிதியோடு கட்டப்பட்டிருக்கின்ற அந்தக் கட்டிடத்தை ஆய்வு செய்தோம். அடுத்த மாதம் 25 ம் தேதி முதலமைச்சர் அந்த கட்டிடத்தை திறந்து வைப்பதற்குண்டான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றோம்.

அந்த வகையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் கட்டப்பட்டு வருகின்ற 4 புதிய மாநகராட்சி பள்ளிக்கூடங்களையும், அதேபோல் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட்டு வருகின்ற டயாலிசிஸ் சென்டர், 2 பேருந்து முனையங்கள், அதேபோல் வணிக வளாகங்கள் ஆகியவற்றையும் இன்றைக்கு கள ஆய்வு செய்தோம். இந்த பணிகள் அனைத்தும் 2025 ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருகின்ற முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் 4,378 கோடி ரூபாய் அளவிற்கு தமிழக முதல்வர் 218 பணிகளை அறிவித்திருக்கின்றார். அதில் 118 பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற நூறு பணிகளை தொடர்ந்து அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து அந்த பணிகளையும் மேற்கொண்டு இந்த எல்லா பணிகளையும் டிசம்பர் 2025க்குள் முடிக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் நேரடி கண்காணிப்பில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தை வைத்து, தொடர்ந்து பணிகளை முடக்கிக் கொண்டிருக்கின்றார்.

இவ்வாறு பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் ஆர்.பிரியா, நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கண்காணிப்பு அலுவலர் ப.கணேசன்,

மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியம், மாநகராட்சி அலுவலர்கள், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

# நிலக்கரி எரிவாயுமயமாக்கல் திட்டங்களுக்கு ஊக்கம்




சென்னை, 26 ஜூலை 2024: இந்தியாவில் பரந்து விரிந்து கிடக்கும் 378 பில்லியன் டன் அளவுள்ள நிலக்கரி சுரங்கங்களில், 199 பில்லியன் டன் உயர் ரகத்தைச் சேர்ந்தது என்பதால், எரிசக்தி உற்பத்திக்கான வாய்ப்புகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு உள்ளன. இந்த நாடு தூய்மையான எரிசக்தி திட்டங்களைப் பின்பற்றி வரும் நிலையில், புதுப்பிக்கத்தக்க வளங்கள் உத்வேகம் பெற்றுள்ளன. எனவே, நிலையான நிலக்கரி பயன்பாட்டை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய நிலக்கரி அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

2020-ல் தொடங்கப்பட்ட நிலக்கரி எரிவாயுமயமாக்கல் திட்டத்தின்படி, 2030-க்குள் 100 மில்லின் டன் நிலக்கரியை எரிவாயுவாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி, 2027-க்குள் எரிசக்தி துறையில் சுதந்திரம் அடைவதற்கான இலக்கை அடைய உறுதுணையாக இருக்கும்.

நிலக்கரி எரிவாயுமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்த, கோல் இந்தியா நிறுவனம், பாரத மிகுமின் நிறுவனம் மற்றும் இந்திய எரிவாயு ஆணையத்துடன் இணைந்து, புதிய கூட்டாண்மை நிறுவனத்தைத் தொடங்க, பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. 8,500 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்தில், 4050 கோடி ரூபாய் பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் துறை, பொதுத்துறை கூட்டு நிறுவனங்களுக்கு 3850 கோடி ரூபாயும், ஊக்க நிதி வழங்குவதற்காக 1000 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டாண்மை நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்களில், என்எல்சி இந்தியா நிறுவனத்தின் லிக்னைட்டிலிருந்து மெத்தனால் எடுக்கும் திட்டத்தின் மூலம், சின்கேஸ், டீசல், பசுமை ஹைட்ரஜன் போன்ற பசுமை எரிசக்தி பொருட்களை தயாரிக்கும் என மத்திய நிலக்கரி துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சிலை கடத்தலைத் தடுக்க இந்தியா – அமெரிக்கா இடையே ஒப்பந்தம்

சென்னை, 26 ஜூலை 2024: இந்தியாவிலிருந்து புராதானப் பொருட்கள், அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக கடத்தப்படுவதை தடுக்க வகை செய்யும் ஒப்பந்தத்தில், இந்தியாவும், அமெரிக்காவும் கையெழுத்திட்டுள்ளன.




புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்ற 46-வது உலக பாரம்பரிய குழுவின் கூட்டத்திற்கு இடையே, இன்று (26.07.2024) இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் முன்னிலையில், மத்திய கலாச்சாரத்துறை செயலாளர் திரு கோவிந்த் மோகன், இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் திரு எரிக் கேர்செட்டி ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். யுனெஸ்கோவின் 1970-ம் ஆண்டு உடன்படிக்கைக்கு ஏற்ப, கலாச்சார உடைமைகள் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், இந்தியாவின் செழுமையான, பன்முக கலாச்சார பாரம்பரியம் மற்றும் நமது பழம்பெரும் வரலாற்றுக் காலத்து விலை மதிப்பற்ற கலைப்பொருட்களை தாயகத்திற்கு மீட்டு கொண்டுவருவதில் இந்த ஒப்பந்தம் முக்கியமானது என்றார்.

கலாச்சார உடைமைகள் சட்ட விரோதமாக கடத்தப்படுவதை தடுப்பதற்கான புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக இது அமையும் என்று குறிப்பிட்ட அவர், கடத்தப்பட்ட புராதானப் பொருட்களை அவற்றின் மூல இடத்திற்கே கொண்டு வந்து சேர்ப்பதே நோக்கம் என்று தெரிவித்தார்.

# இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மைய வளாகத்தில் பாபா அணுசக்தி ஆராய்ச்சி மைய பயிற்சிப் பள்ளியின் பட்டமளிப்பு விழா

சென்னை, 26 ஜூலை 2024: இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் உள்ள பாபா அணுசக்தி ஆராய்ச்சி மைய பயிற்சிப் பள்ளியின் 18-வது தொகுதி பயிற்சி அறிவியல் அலுவலர்கள் அணு அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் தங்கள் ஓராண்டு நோக்குநிலை மற்றும் பயிற்சியை வெற்றிகரமாக முடித்துள்ளனர். எந்திரப் பொறியியல், ரசாயனப் பொறியியல், மின்னணுவியல், கருவியியல், அணுஉலை இயற்பியல், அணு எரிபொருள் சுழற்சி வேதியியல் ஆகிய துறைகளில் ஜூலை 26, 2024 அன்று இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் பட்டம் பெற்றனர்.




டாக்டர். வித்யா சுந்தரராஜன் விழாவில் வரவேற்று பேசினார். கடந்த 18 ஆண்டுகளில், 600-க்கும் அதிகமான பயிற்சியாளர்கள் பட்டம் பெற்றுள்ளனர் என்று அவர் அப்போது கூறினார்.

புகழ்பெற்ற விஞ்ஞானியும், இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மைய இயக்குநருமான, திரு சி ஜி கர்ஹாட்கர் தமது உரையில், அணுசக்தித்துறையில் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல தொழில்நுட்ப சிறப்போடு பின்பற்ற வேண்டிய ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பு பற்றி குறிப்பிட்டார். பேராசிரியர். ஏ கே தியாகி, புகழ்பெற்ற விஞ்ஞானி, ஜே சி போஸ் ஆகியோர் கலந்துகொண்டு, நினைவு மலரை வெளியிட்டு முதலிடம் பெற்றவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் மதிப்புமிக்க ஹோமிபாபா பரிசுகளை வழங்கினர். அணு எரிபொருள் சுழற்சி வேதியியல் துறையிலிருந்து இந்தத் தொகுப்பில் ஒட்டுமொத்த முதலிடம் மற்றும் ஹோமி பாபா பதக்கத்தை திரு கன்னையா குமார் பகத் பெற்றார்.

# ரூ.7,000 கோடி முதலீட்டுடன் சாகர் மாலா திட்டங்கள் ஆந்திரப் பிரதேசத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன

சென்னை, 26 ஜூலை 2024: ரூ.7,000 கோடி முதலீட்டுடன் சாகர் மாலா திட்டங்கள் ஆந்திரப் பிரதேசத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, நீர்வழிப் பாதைகள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையில் திரு கிருஷ்ண பிரசாத் தென்னேட்டி, ஒய் எஸ் அவினாஷ் ரெட்டி ஆகியோர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து 29 புதிய திட்ட ஆலோசனைகள் பெறப்பட்டதாகவும், ரூ.3,300 கோடி ரூபாய் மதிப்பில் துறைமுக மேம்பாடு, கடலோர சிறுதுறைமுகங்கள் போன்ற திட்டங்கள் இதில் அடங்கும் என்றும் கூறினார். சாகர் மாலா திட்டத்தின் கீழ் ரூ.2500 கோடி நிதியுதவி கோரி ஆந்திரப் பிரதேச அரசிடமிருந்து 13 திட்ட ஆலோசனைகள் பெறப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆந்திரப் பிரதேசத்திற்கான 22 திட்டங்கள் ரூ.2530 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும், ரூ.2070 கோடி மதிப்பிலான 14 திட்டங்களின் பணி பல்வேறு நிலைகளில் இருப்பதாகவும் திரு சோனாவால் கூறினார்.

கடல்சார் சிறப்பு கல்வி மையங்கள், கப்பல் கட்டும் தளங்கள் பற்றி குறிப்பிட்ட அமைச்சர், ஆசியாவிலேயே முதலாவதாக விசாகப்பட்டினத்தில் இத்தகைய மையம் ஒன்று அமைக்கப்பட விருப்பதாகவும், இதில் 10,000-க்கும் அதிகமான மாணவர்கள் பொறியியல், தொழில்நுட்ப திறன்களை பெறுவார்கள் என்றும் கூறினார்.

# கடற்படை பாடசாலைகளுக்கான ஒருங்கிணைந்த நிறுவன வள திட்டமிடல் (ஈஆர்பி) மற்றும் வலைத்தளங்களின் அறிமுகம்

சென்னை, 26 ஜூலை 2024: கடற்படை பள்ளிகளுக்கான ஒருங்கிணைந்த நிறுவன வள திட்டமிடல் (ஈஆர்பி), வலைத்தளங்களை கமாடோர் (கடற்படை கல்வி), கடற்படை கல்வி சங்கத்தின் துணைத் தலைவர் கமாண்டர் ஜி ராம்பாபு 2024 ஜூலை 25 அன்று தில்லி கடற்படை சிறார்கள் பள்ளியில் நடத்தப்பட்ட ஆன்லைன் விழாவில் தொடங்கிவைத்தார். கடற்படை கல்வி அதிகாரிகள், கடற்படை பள்ளிகளின் மூத்த தலைவர்கள், ஜெனிபர் சாப்ட்டெக் நிறுவனத்தின் பிரதிநிதிகள் விழாவில் கலந்து கொண்டனர்.

மேம்படுத்தப்பட்ட ஈஆர்பி பயன்பாட்டையும், வலைத்தளங்களின், செயல்முறைகளையும் தரப்படுத்துதல் மற்றும் தரவு நிர்வாகத்தை மையப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, தில்லி, விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை சிறார்கள் பள்ளிகளுக்கு முன்னோட்டத் திட்டமாக இது செயல்படுத்தப்படுகிறது.

# மைகவ் தளத்தின் 10 ஆண்டுகள்: பிரதமர் பாராட்டு

சென்னை, 26 ஜூலை 2024: மைகவ் தளம் பங்கேற்பிற்கும், நல்லாட்சிக்கும் துடிப்புமிக்க அமைப்பு என்று பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

மதிப்புமிக்க கருத்துகள், உள்ளீடுகள் மூலம் மைகவ் தளத்தை வளப்படுத்திய அனைவரையும் திரு மோடி பாராட்டியுள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் பதிவிட்டிருப்பதாவது:

"இன்று நாம் மைகவ் தளத்தின் 10-வது ஆண்டினை #10இயர்ஸ் ஆப் மை கவர்மெண்ட் கொண்டாடுகிறோம். இந்தத் தளத்தை வளப்படுத்த, தங்களின் மதிப்புமிக்க கருத்துகளையும், உள்ளீடுகளையும் பகிர்ந்து கொண்ட அனைவரையும் நான் பாராட்டுகிறேன். கடந்த பத்தாண்டுகளில், பங்கேற்புக்கும், நல்லாட்சிக்கும் துடிப்புமிக்க தளமாக மைகவ் இருந்துள்ளது."

# கேரளாவிற்கு ரூ.160 கோடி முதலீட்டு மதிப்பில் 33 சாலை திட்டங்களுக்கு அனுமதி

சென்னை, 26 ஜூலை 2024: கேரளாவிற்கு ரூ.160 கோடி முதலீட்டு மதிப்பில் 159.86 கி.மீ. நீள 33 சாலை திட்டங்களுக்கு மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது. பிரதமரின் கிராம சாலைகள் திட்டம் மூன்றின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தால் கேரளாவின் ஊரக போக்குவரத்து தொடர்பு வலுப்படுத்தப்படுவதோடு, பொருளாதார வளர்ச்சியையும் வேகப்படுத்தும்.

மேலும் நகர்ப்புற மையங்களுக்கும், தொலைதூர கிராமங்களுக்கும் இடையேயான இடைவெளியை நிரப்பும் பாலமாக இது இருக்கும்.

அத்தியாவசிய சேவைகளான சுகாதாரம், கல்வி, சந்தை போன்றவற்றை எளிதாக அணுகுவதை இது மேம்படுத்தும்.

வேலைவாய்ப்பை உருவாக்குவதுடன், உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்கப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தொழில் தொடங்குவதை எளிதாக்க நடவடிக்கை

சென்னை, 26 ஜூலை 2024: தொழில் தொடங்குவதை எளிதாக்க, ஏற்றுமதி ஊக்குவிப்பு மூலதன சரக்குகள் திட்ட நடைமுறைகளை, வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குநரகம் எளிமைப்படுத்தியுள்ளது.

பரிவர்த்தனை செலவுகளை குறைத்து, எந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதன் மூலம், ஏற்றுமதியாளர்கள் பயனடையும் விதமாக இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில் தொடங்குவதற்கு உகந்த சூழலை உருவாக்கி, இந்தியாவின் உற்பத்தி போட்டித் திறனை அதிகரிப்பது என்ற மத்திய அரசின் உறுதிப்பாட்டிற்கு ஏப்ப, இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, ஏற்றுமதியாளர்கள் தாங்கள் இறக்குமதி செய்யும் மூலதன சரக்குகளை, தொழிற்சாலையில் நிறுவியதற்கான சான்றிதழை சமர்ப்பிக்க கூடுதல் அவகாசம் கிடைக்கும் எனவும், மத்திய வர்த்தக தொழில்துறை தெரிவித்துள்ளது.

# கார்ப்பரேட் நிறுவன ஊழியர்களின் செயல்திறனை மேம்படுத்த 'கலை சிகிச்சை' முறைகள்

சென்னை, 26 ஜூலை 2024: சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி மெட்ராஸ்) மேற்கொண்ட ஆய்வில், ஊழியர்களின் ஆக்கப்பூர்வமான, உணர்வுப்பூர்வமான செயல்பாடுகளை வளர்ப்பதே, நிலையற்ற வணிகத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கான அணுகுமுறையாக இருக்கும் என கண்டறியப்பட்டுள்ளது.

பாஸ்டன் கன்சல்டிங் குரூப், ஜெராக்ஸ் பார்க், சீமென்ஸ், ஐபிஎம் போன்ற மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் தங்கள் மேலாண் இலக்குகளை அடையும் நோக்கில் கலைசார்ந்த சிகிச்சைகளை ஏற்கனவே செயல்படுத்தி வருகின்றன. பணியிடங்களில் எவ்வாறு கலைநுட்பங்களைப் பயன்படுத்துவது என இந்த ஆராய்ச்சி பரிந்துரைக்கிறது. இதனால் ஒட்டுமொத்த பெரு நிறுவன கலாச்சாரமும் செழுமையடைகிறது.

சென்னை ஐஐடி மேலாண்மைக் கல்வித் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களான பேராசிரியை வி.விஜயலட்சுமி, அவரின் முனைவர் பட்ட மாணவி செல்வி. எம்.ஜனனி ஆகியோர், பணியாளர்களின் சுறுசுறுப்பை அதிகரிக்க பல்வேறு முறைகளை இந்த ஆய்வில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அவர்களின் ஆய்வுக் கட்டுரை ஜர்னல் ஆஃப் ஆர்கனைசேஷனல் சேஞ்சு மேனேஜ்மெண்ட் என்பதில் வெளியிடப்பட்டுள்ளது,

இந்த ஆராய்ச்சியின் முக்கிய கண்டுபிடிப்புகளை விவரித்த இணைக் கட்டுரையாளரான சென்னை ஐஐடி மேலாண்மைக் கல்வித் துறையின் பேராசிரியை வி.விஜயலட்சுமி, "கலைகளுக்கென குறிப்பிடத்தக்க வரலாறும், எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகளை வடிவமைக்கும் திறன்களும் உண்டு. பாரம்பரியப் பயிற்சி முறைகளுடன் ஒப்பிடும்போது, அனுபவரீதியான கலை முறைகள் நேர்மறையான மனநிலையைத் தூண்டுவதுடன் படைப்பாற்றலையும் புதுமைகளையும் ஊக்குவிக்கின்றன. பணியிடத்தில் ஒருவரின் சிந்தனையையும் நடத்தையையும் விரிவுபடுத்த ஏதுவாக மேம்பட்ட நன்மைகளை வழங்குகின்றன" என்றார்.

மன அழுத்தம் நிறைந்த பணிச்சூழலில் அவர்களின் ஆற்றலையும் ஊக்கத்தையும் நிலைநிறுத்த, நெருக்கடியான சமயங்களில் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

தலைமுறை மாற்றங்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், வளர்ந்து வரும் உலகை மாற்றியமைக்க நிலையான தேவைப்பாடு ஆகியவை பணியாளர்களின் திறனை அதிகரிக்கச் செய்யும் வழிகளாகும்.

'பணியாளர் சுறுசுறுப்பு' என்ற கருத்தை சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொண்டுள்ளனர். நிறுவன சவால்களை எதிர்கொள்ளாமல் ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளை மேற்கொள்ள இது உதவுகிறது. போட்டிகள் நிறைந்த வணிகச் சூழலில் செயல்படும்போது வாய்ப்புகளையும், அபாயங்களையும் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கும் இது உதவியாக இருக்கிறது.

பணியாளர்களின் சுறுசுறுப்பை அதிகரிப்பதற்கான வழக்கமான முயற்சிகளில் தனிப்பட்ட பணியாளர் ஒருவருக்கு மிக அரிதாகத்தான் முன்னுரிமை வழங்கப்படுகிறது. தனிநபர்களின் சுறுசுறுப்பை மேம்படுத்தும் விதத்தில் அவர்களின் குணநலன்கள் இதுவரை மிகக் குறைந்த அளவே கவனம் பெற்றுள்ளன. எனினும், பணிக் கலாச்சாரத்தைப் பொறுத்தவரை ஊழியர்களின் ஆக்கபூர்வமான தேவைகளைப் பாதுகாப்பதில் பின்தங்கியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

ஊழியர்களின் எண்ணங்களை - நடத்தைகளை வெளிப்படுத்தவும், அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும், பணியில் உள்ள நெறிமுறைச் சங்கடங்கள் போன்ற சிக்கல்களைப் பற்றி சிந்திக்கவும் புரிந்துகொள்ளவும் இது உதவிகரமாக இருக்கும். கலை அடிப்படையிலான முறைகளில் பயிற்சி பெற்ற செயல்பாட்டாளர் ஒருவரால்தான், எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்து ஏற்கும் நிலைப்பாட்டிற்கு ஊழியர்களை மெதுவாக வழிநடத்த முடியும்.

சென்னை ஐஐடி மேலாண்மை கல்வித் துறையின் முனைவர் பட்ட ஆராய்ச்சியாளரும், கட்டுரையாளருமான செல்வி எம்.ஜனனி தமது முனைவர் பட்ட ஆய்வறிக்கை குறித்து விவரிக்கையில், "இந்த ஆய்வு தொடர்புடைய பலருக்கு சாதகமான அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. ஏனெனில், பாரம்பரியமான பயிற்சி அடிப்படையிலான அமைப்பிலிருந்து அனுபவமிக்க முறைக்கு மாற்றுவதுடன் நிறுவனங்களை அடுத்தகட்டத்திற்கு நகர்த்திச் செல்ல இது உதவிகரமாக இருக்கும். ஊழியர்களிடையே உள் மற்றும் வெளிப்புற உரையாடல்கள், புதிய உறவுகள்- சிந்தனை முறைகளை உருவாக்கலாம். இது ஒரு நல்ல, அக்கறை மிகுந்த கூட்டுப் பணிக் கலாச்சாரத்தை உருவாக்க பயன்படுத்தப்படக் கூடும்" என்றார்.

நிறுவனங்களுக்கிடையே இருந்துவரும் நவீன வாழ்க்கைமுறை, உறுதியான கட்டமைப்புகளைக் கொண்டிருப்பதால் ஊழியர்களிடமிருந்து இலக்குகளையும், எட்ட வேண்டிய நிலையையும் நிர்ணயிக்கக் கோரலாம். இது வேலைச் சூழலில் சலிப்பையோ ஆக்கப்பூர்வமான வெற்றிடத்தையோ ஏற்படுத்தும். காலப்போக்கில், பணியாளரின் உற்பத்தித்திறனில் குறிப்பிட்ட அளவு சலிப்பை ஏற்படுத்தக்கூடும், பணியாளர்கள் குறைந்தபட்சக் கடமைகளை செய்வதில் கவனம் செலுத்துவதில்லை. தங்களுடைய வேலைகளுக்குத் தொடர்பில்லாத ஓய்வு நேர நடவடிக்கைகளுக்கு அதிக நேரம் செலவிட ஆர்வம் கொள்கின்றனர்.

பணியாளர் ஒருவரின் உளம்சார்ந்த அம்சங்களைப் பிரிப்பதன் மூலம், தங்கள் வேலைகளில் அவர்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு ஏதுவாக மகிழ்ச்சியான மனநிலையோடு முக்கிய பங்களிப்பை வழங்குவதை இந்த ஆராய்ச்சி சுட்டிக் காட்டுகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## அமைவிட வசதிகளை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை ஏ எல் எம் ஃபுட் பிராடக்ட்ஸ் உடன் மேற்கொள்ளும் எச் எம் ஏ அக்ரோ இன்டஸ்ட்ரீஸ்

சென்னை, 26 ஜூலை 2024: கையாளப்படும் உணவுகள் மற்றும் வேளாண் பொருட்கள் துறையில் முதன்மை வகிக்கும் எச் எம் ஏ அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், ஏ எல் எம் ஃபுட் பிராடக்ட்ஸ் லிமிடெட் (ஏ எல் எம் ஃபுட்), பஞ்சாப் & ஏ எல் எம் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் (ஏ எல் எம்), சஹாரன்பூர் ஆகிய நிறுவனங்களோடு அமைவிட வசதிகள் (ஃபெசிலிட்டிஸ்) தொடர்பான ஒப்பந்தங்களை தான் மேற்கொண்டிருப்பதாக அறிவித்திருக்கிறது. உறைய வைக்கப்பட்ட, ஹலால் எலும்பில்லாத எருமை மாட்டு இறைச்சிக்கான வெட்டுதல், குளிரூட்டுதல், பதப்படுத்துதல், உறைய வைத்தல் மற்றும் பேக்கிங் செய்தல் ஆகிய பணிகளுக்கான வசதிகளை பயன்படுத்துவது இந்த ஒப்பந்தங்களது அம்சங்களில் உள்ளடங்கும். இதற்கு முன்னதாக, 2024 மார்ச் 31 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் முழு ஆண்டிற்கான வருவாய் உட்பட நிதிசார் முடிவுகளை இந்நிறுவனம் அறிவித்திருந்தது. மொத்த வருவாய் முந்தைய ஆண்டின் அளவான ரூ. 32560.91 மில்லியனிலிருந்து (எஃப் ஒய்23) 49% வளர்ச்சியுடன் ரூ. 48618.72 மில்லியன் (எஃப் ஒய்24) என்ற அளவை எட்டியிருக்கிறது. சிறப்பான வருவாய் வளர்ச்சி இருந்தபோதிலும், இலாப வரம்புகளில் சரிவை இந்நிறுவனம் எதிர் கொண்டிருந்தது. மூலப்பொருட்களின் உள்நாட்டு விலைகள் அதிகரிப்பு மற்றும் செங்கடல் நெருக்கடி சூழலின் பாதிப்பு ஆகியவை, இலாப வரம்புகள் குறைந்திருப்பதற்கான காரணம் என கருதப்படுகிறது. இருப்பினும், எதிர்காலம் குறித்து இந்நிறுவனத்தின் நிர்வாகம் நேர்மறையான நம்பிக்கையுடன் இருக்கிறது மற்றும் சர்வதேச நிலைமைகள் சீரானவுடன் இலாப வரம்பில் முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறது. எச் எம் ஏ அக்ரோ இன்டஸ்ட்ரீஸ், ஒரு உணவுப்பொருள் வர்த்தக அமைப்பாகச் செயல்படுகிறது. இந்த நிறுவனம் உறைந்த புதிய எருமை இறைச்சி, தயாரிக்கப்பட்ட மற்றும் உறைந்த இயற்கைப் பொருட்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்கள் உள்ளிட்ட கையாளப்படும் உணவுகள் மற்றும் விவசாயப் பொருட்களை வழங்குகிறது. நாளொன்றுக்கு 1472 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்டுள்ள எச் எம் ஏ அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் உலகளாவிய அளவில் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வருகிறது. இந்த நிறுவனத்தின் சிறப்பு வாய்ந்த உற்பத்தி மையங்கள் ஆக்ரா, உன்னோ, பஞ்சாப், அலிகார், மேவாட் மற்றும் பிரபாஹனி ஆகிய ஆறு நகரங்களில் அமைந்துள்ளன. இந்நிறுவனம் உற்பத்தி மற்றும் சில்லறை விற்பனைக்காக முழுவதும் தானியங்கி வசதியுடன், முற்றிலும் ஒருங்கிணைக்கப்பட்ட உள்கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இந்நிறுவனமானது செயல்திட்ட அடிப்படையில் குறைவான இலாப வரம்புள்ள நாடுகளில் விற்பனையைக் குறைத்துக் கொண்டு, அதிக லாப வாய்ப்பு உள்ள சந்தைகளை நோக்கி படிப்படியாக நகர்ந்து வருகிறது.






சென்னையில் உள்ள முன்னணிக் கல்வி நிறுவனமான அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, பாரிசில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் 2024 நிகழ்வையொட்டி ‘ஏ.எம்.ஜே.சி சல்யூட்ஸ் தி ஒலிம்பியன்ஸ்’ என்ற மெய் சிலிர்க்கும் இசை நிகழ்வை நடத்தியது. 1980 இல் நடைபெற்ற ‘மாஸ்கோ ஒலிம்பிக்‘ ஹாக்கி அணியின் தங்கம் வென்ற கேப்டன் பத்மஸ்ரீ வி. பாஸ்கரன் மற்றும் பிரெஞ்சு நாட்டுப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட பாரிசில் உள்ள பிரெஞ்சு தேசிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தைச் சார்ந்த மேடம் ஆனி க்ளாடே டெமாக்னி ஆகியோர் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். ஐநூறு மாணவர்கள் வண்ணமயமான கொடிகள் மற்றும் முகமூடிகளுடன் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு 2024 கோடைக்கால ஒலிம்பிக்கில் பங்கேற்கும் அனைத்து இந்திய விளையாட்டு வீரர்களுக்கும் தனிப்பட்ட முறையில் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் முதல்வர். டாக்டர் பி. மகாவீர் அவர்கள் கூறுகையில், “எங்கள் மாணவர்கள், உலகளாவிய அளவில் நடைபெறும் பாரீஸ் 2024 ஒலிம்பிக் நிகழ்வைப் பெருமைப்படுத்தும் வகையிலும் ஊக்குவிக்கும் விதமாகவும் பிரமாண்ட பேரணியை நடத்தினர் “ என்று கூறினார்.

## இந்தியாவில் கேலக்ஸி ஏ ஐ இயங்கும் கேலக்ஸி இசட் ஃபோல்ட்6, இசட் ஃபிலிப்6 க்கு வாடிக்கையாளர்களிடமிருந்து சாம்சங் மிகப்பெரிய பதிலைப் பதிவு செய்துள்ளது




சென்னை, 26 ஜூலை 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், அதன் ஆறாம் தலைமுறை மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போன்களான கேலக்ஸி இசட் ஃபோல்ட்6 மற்றும் கேலக்ஸி இசட் ஃபிலிப்6 ஆகியவற்றிற்கான பதிவு முன்கூட்டிய ஆர்டர்களை அறிவித்தது. முதல் 24 மணி நேரத்தில், கேலக்ஸி இசட் ஃபோல்ட்6 மற்றும் இசட் ஃபிளிப்6 க்கான முன்கூட்டிய ஆர்டர்கள் முந்தைய தலைமுறை மடிக்கக்கூடிய வகைகளுடன் ஒப்பிடும்போது 40% அதிகமாக உயர்ந்தது, இது புதிய இசட் தொடரை இந்தியாவில் மிகவும் வெற்றிகரமானதாக மாற்றியது.

கேலக்ஸி இசட் ஃபோல்ட்6 மற்றும் இசட் ஃபிளிப்6க்கான முன்கூட்டிய ஆர்டர்கள் ஜூலை 10 அன்று இந்தியாவில், உலகின் பிற பகுதிகளுடன் தொடங்கப்பட்டன. கேலக்ஸி வாட்ச் அல்ட்ரா, கேலக்ஸி வாட்ச்7, கேலக்ஸி பட்ஸ்3 ப்ரோ மற்றும் கேலக்ஸி பட்ஸ்3 - சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் அமைப்பு சாதனங்களுடன் புதிய ஸ்மார்ட்போன்கள் ஜூலை 24, 2024 முதல் இந்தியாவில் விற்பனைக்கு வரும். “இந்தியாவில் எங்களின் புதிய ஃபோல்டபிள்களான கேலக்ஸி இசட் ஃபோல்ட்6 மற்றும் கேலக்ஸி இசட் ஃபிளிப்6 ஆகியவற்றுக்கான நுகர்வோர் வரவேற்பில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். புதிய மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போன்களுக்கான முன்கூட்டிய ஆர்டர்களில் 1.4 மடங்கு வளர்ச்சியானது, புதிய தொழில்நுட்பத்தை வேகமாக ஏற்றுக்கொள்பவர்களில் இந்திய வாடிக்கையாளர்கள் இருப்பதைக் காட்டுகிறது. எங்களின் புதிய மடிக்கக்கூடிய ஸ்மார்ட்போன்கள், இப்போது ஆறாவது தலைமுறையில் உள்ளன, கேலக்ஸி ஏஐ இன் அடுத்த அத்தியாயத்தைத் திறந்து பயனர் அனுபவத்தை புதிய உயரத்திற்கு உயர்த்தி, தகவல் தொடர்பு, உற்பத்தித்திறன் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றில் தனித்துவமான மொபைல் அனுபவங்களைச் செயல்படுத்துகிறது. கேலக்ஸி இசட் ஃபோல்ட்6 மற்றும் கேலக்ஸி இசட் ஃபிளிப்6 ஆகியவற்றின் வெற்றி, இந்தியாவில் எங்களது பிரீமியம் பிரிவுத் தலைமையை ஒருங்கிணைக்க உதவும்,” என்று சாம்சங் இந்தியாவின் எம் எக்ஸ் வணிகத்தின் மூத்த துணைத் தலைவர் ராஜு புல்லன் கூறினார்.

இந்திய வாடிக்கையாளர்களுக்காக, கேலக்ஸி இசட் ஃபோல்ட்6 மற்றும் இசட் ஃபிளிப்6 ஆகியவை சாம்சங் நொய்டா தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன. புதிய ஃபோல்டபிள்கள் இதுவரை இல்லாத மெலிதான மற்றும் இலகுவான கேலக்ஸி இசட் தொடர் சாதனங்களாகும், மேலும் நேரான விளிம்புகளுடன் கூடிய சமச்சீர் வடிவமைப்புடன் வந்துள்ளன. கேலக்ஸி இசட் தொடரில் மேம்படுத்தப்பட்ட ஆர்மர் அலுமினியம் மற்றும் கார்னிங் கொரில்லா கிளாஸ் விக்டஸ் 2 ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன, இது இன்னும் நீடித்த கேலக்ஸி இசட் தொடராக உள்ளது.

கேலக்ஸி இசட் ஃபோல்ட்6 மற்றும் ஃபிளிப்6 ஆகியவை கேலக்ஸிக்கான ஸ்னாப்டிராகன் 8 ஜென் 3 மொபைல் இயங்குதளத்துடன் பொருத்தப்பட்டுள்ளன, இது இன்னும் மேம்பட்ட ஸ்னாப்டிராகன் மொபைல் செயலியாகும், இது சிறந்த சி பி யூ, ஜி பி யூ மற்றும் என் பி யூ செயல்திறன் ஆகியவற்றை இணைக்கிறது. செயலி ஏஐ செயலாக்கத்திற்கு உகந்ததாக உள்ளது மற்றும் மேம்படுத்தப்பட்ட ஒட்டுமொத்த செயல்திறனுடன் மேம்படுத்தப்பட்ட கிராபிக்ஸ் வழங்குகிறது.

கேலக்ஸி இசட் ஃபோல்ட்6 ஆனது ஏஐ-இயங்கும் அம்சங்கள் மற்றும் கருவிகளை வழங்குகிறது - குறிப்பு உதவி, இசையமைப்பாளர், படத்திற்கு ஸ்கெட்ச், மொழிபெயர்ப்பாளர், புகைப்பட உதவி மற்றும் உடனடி ஸ்லோ-மோ - பெரிய திரையை அதிகரிக்கவும், உங்கள் உற்பத்தித்திறனை கணிசமாக அதிகரிக்கவும். கேலக்ஸி இசட் ஃபோல்ட்6 இப்போது நீண்ட கேமிங் அமர்வுகளுக்கு 1.6எக்ஸ் பெரிய நீராவி அறையுடன் வருகிறது மற்றும் ரே ட்ரேசிங் அதன் 7.6-இன்ச் திரையில் லைஃப் போன்ற கிராபிக்ஸ்களை ஆதரிக்கிறது, இது அதிக ஆழமான கேமிங்கை வழங்க 2,600 நைட் வரை பிரகாசமான காட்சியை வழங்குகிறது.

கேலக்ஸி இசட் ஃபிளிப்6 இப்போது புதிய தனிப்பயனாக்கம் மற்றும் படைப்பாற்றல் அம்சங்களை வழங்குகிறது, எனவே நீங்கள் ஒவ்வொரு தருணத்தையும் அதிகம் பயன்படுத்தலாம். 3.4-இன்ச் சூப்பர் அமோல்ட் ஃபிளெக்ஸ்விண்டோ மூலம், சாதனத்தைத் திறக்க வேண்டிய அவசியமின்றி ஏஐ-உதவி செயல்பாடுகளைப் பயன்படுத்தலாம். பரிந்துரைக்கப்பட்ட பதில்களுடன் உரைகளுக்கு நீங்கள் பதிலளிக்கலாம், இது உங்களது சமீபத்திய செய்திகளை பகுப்பாய்வு செய்து, பொருத்தமான பதிலை பரிந்துரைக்கும்.

ஃபிளெக்ஸ்கேம் இப்போது புதிய ஆட்டோ ஜூம் உடன் வருகிறது புதிய 50 எம்பி வைட் மற்றும் 12 எம்பி அல்ட்ரா-வைட் சென்சார்கள், படங்களில் தெளிவான மற்றும் மிருதுவான விவரங்களுடன் மேம்படுத்தப்பட்ட கேமரா அனுபவத்தை வழங்குகிறது. புதிய 50 எம்பி சென்சார் சத்தமில்லாத புகைப்படங்களுக்கு 2 எக்ஸ் ஆப்டிகல் ஜூமை ஆதரிக்கிறது, அதே நேரத்தில் 10 எக்ஸ் ஜூம் மூலம் மேம்பட்ட படப்பிடிப்பு அனுபவத்திற்கு ஏஐ ஜூம் வழங்குகிறது. கேலக்ஸி இசட் ஃபிளிப்6 இப்போது மேம்படுத்தப்பட்ட பேட்டரி ஆயுளுடன் வருகிறது மற்றும் முதல் முறையாக நீராவி அறையைப் பெறுகிறது.

சாம்சங் நாக்ஸ், சாம்சங் நாக்ஸ், சாம்சங் கேலக்ஸி இன் டிஃபென்ஸ்-கிரேடு, பல அடுக்கு பாதுகாப்பு தளம், முக்கியமான தகவல்களைப் பாதுகாப்பதற்காகவும், பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கவும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

## புதிய துறைமுகங்கள் தொடக்கம்

சென்னை, 26 ஜூலை 2024: மகாராஷ்டிரா மாநிலம் வதாவன் பகுதியில் பெரிய துறைமுகம் ஒன்றை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டின் இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தக தேவைகள் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டும், வதாவன் பகுதியின் இயற்கை சாதகங்கள் காரணமாகவும், அங்கு துறைமுகம் அமைக்கப்பட உள்ளது.

இதேபோன்று, அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்குட்பட்ட கிரேட் நிக்கோபார் தீவில், முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ள கலாத்தியா வளைகுடாவில், சர்வதேச சரக்குப் பெட்டகம் மாற்று முனையம் அமைக்க அடையாளம் காணப்பட்டுள்ளதாக மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது உள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் பட்டியலையும் அமைச்சர் வெளியிட்டுள்ளார். இதன்படி, தமிழகத்தில் 3 பெரிய துறைமுகங்களும், 17 சிறிய துறைமுகங்களும் உள்ளன. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 3 சிறிய துறைமுகங்கள் உள்ளன.

சாகர்மாலா திட்டத்தின் கீழ், தமிழகத்தில் 22 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.